ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி



சமய - சமூக - இலக்கிய மாசிகை

30/=

மார்ச் - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**மார்ச் – 2013**

மலர் - 45 இதழ் - 02

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  சந்திரசேகரன் சசீதரன்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்கள்**
  A.G.இராஜேந்திரம்
  A.S.யோகராஜா
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்,
  திரு/மட். மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே ...




அன்புடன் உங்களோடு .............. 01
திருத்தந்தை ஓய்வு .................... 02
அகத்தியரின் அழகான ............. 03
உயர்வினைக் காணவே .............. 05
விலங்குகளை உடையுங்கள் ...... 06
அன்பின் அரசி ............................ 08
மாணவர் பக்கம் ....................... 09
இலக்கிய மஞ்சரி ....................... 10
ஞானமும் ஊனமும் ................... 11
செபமும் தவமும் ....................... 12
திருநீற்றுப் புதன் ...................... 14
தொண்டனின் சில .................... 15
கவிதைகள் ............................... 17
தமிழில் கிறிஸ்தவ ..................... 18
பெண்ணின் பெருமையா ............. 21
உலக நாடுகளுக்குள் ................. 22
வாழ்க்கைக்கு ............................ 23
புனிதர்களை அறிவோம் ............ 25
விவிலியம் கற்போம் ............... 27
அறிவை வளர்ப்போம் .............. 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபால் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"அவரை (கடவுளை) நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகின்றார்" • (உரோமையர் 10:12)

இறைவாக்கு

# அன்புடன் உங்களோடு....!

இயேசுவினுடைய உயிர்ப்பை தகுந்த முறையில் கொண்டாட நம்மையே நாம் தயாரிக்கும் காலமே தவக்காலம். உறவுகள் சீர்குலைந்து போயிருக்கும் இக்கால கட்டத்தில், உறவுகளின் பின்னணியில் நம்மை நாம் எவ்வாறு தயாரிக்க முடியும் என்று சிந்திக்கலாம். வாழ்வின் மிக முக்கியமான அங்கங்களில் ஒன்று உறவு. இதனடிப்படையில் தவசுகாலத்தின் முக்கிய அம்சங்களான, நோன்பு, தர்மம், செபம் ஆகியவற்றின் மூன்று வகையான உறவுகளையும் சிந்தித்துப் பார்ப்போம்.

**நோன்பு மூலம் தன்னோடு உள்ள உறவைச் சரிசெய்தல் :**

முதலில் மனிதன் தன்னோடு உறவுகொள்ள வேண்டும். தன்னை அன்பு செய்ய வேண்டும். தன்னை அன்புசெய்யாத மனிதன் தரணியில் யாரையும் அன்பு செய்யமுடியாது. ஒரு மனிதன் தன்னை எந்தளவிற்கு ஏற்றுக்கொண்டு அன்பு செய்கிறானோ, அந்தளவிற்குத்தான் பிறரை ஏற்று அன்பு செய்யமுடியும். நம்மை நாம் முழுமையாக அன்பு செய்யாததற்குக் காரணம் நம்மைப்பற்றிய சுய அறிவு நம்மிடம் இல்லாததே (Self Knowledge). உடல் அழகு இல்லை என்றும், திறமைகள் இல்லை என்றும் குறைபட்டு நொந்து கொள்வோர் பலர். இவர்கள் இன்னும் கடவுள் தங்களுக்குக் கொடுத்த திறமைகளை அறியாதவர்களாக உள்ளார்கள். இப்படிப்பட்ட பின்னணியில் நோன்பைப் பற்றி பார்க்கும்போது:

"நோன்பு" என்பது, ஒரு நேர உணவை விட்டுக்கொடுக்கும் செயல் அன்று (அதற்குப் பெயர் பட்டினி). மாறாக, இறைவனோடு "தனித்திருப்பது". இயேசு நாற்பது நாட்கள் நோன்பிருந்து இறைவனோடு தனித்திருந்தார் என்று வேதம் சொல்கிறது. தனித்திருப்பதன் மூலம் நமது பாவங்கள், பலவீனங்களை அறிய நம்மால் முடிகின்றது. எனவே, இந்தத் தவசு காலத்தில் இரண்டு மணி நேரமாவது ஒதுக்கி நம்மையே நாம் சுய ஆய்வு செய்வோம்... நான் என்னை எவ்வாறு பார்க்கின்றேன்....?

**தர்மத்தின் மூலம் பிறரோடு உறவு கொள்ளுதல் :**

தர்மம் என்றால் தன்னிடம் உள்ளதில் ஒரு பகுதியை அல்லது தனக்குத் தேவையில்லாத ஒன்றைப் பிறருக்குத் தருவது என்று எண்ணும் நிலை உள்ளது. தர்மம் என்ற வார்த்தையை இயேசு பகிர்வு என்ற பொருளில் பயன்படுத்துகிறார். "பகிர்வின் நிறைவே இறைவன்". இறைவனின் பகிர்வுதான் மானிடத்தின் நிறைவு. பகிர்வு, பொருட்கள், பணம் ஆகியவற்றோடு முடிந்துவிடாமல் நம்முடைய நேரம், உழைப்பு, கரிசனை, பாசம் ஆகியவற்றிலும் இருப்பது அவசியம்.

கர்தினால் மேர்சியர், "நாம் நம்மிடம் உள்ளதை மட்டுமல்ல நம்மையே பிறருக்குக் கொடுக்கவேண்டும்" என்கிறார். இப்படிப் பகிரும்போது அங்கே உறவு மாறுகிறது. நாம் யாரோடு பகிர்ந்து கொள்கிறோமோ அவரும் நம்மில் ஒருவராக மாறிவிடுகின்றார்.

**செபத்தின்மூலம் கடவுளோடு உள்ள உறவைச் சரி செய்தல்:**

செபம் என்பதைக் குறித்துப் பரவலாக மக்களிடையே தவறுதலான எண்ணங்கள் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. செபம் கடவுளை திருப்திபடுத்தும் ஒரு சடங்காக, கோபமாக இருக்கும் கடவுளை குளிர வைக்கும் நிகழ்வாகப் பார்க்கின்றோம். செபம் செய்யும்போது உன் இதயம் இறைவனோடு இணைந்திருந்தால் அது செபம், இணைய மறுத்தால் வெளிவேடம்.

செபம் என்பது முழுக்க முழுக்க ஓர் உறவுக் கொண்டாட்டம். படைத்தவராகிய அவருக்கும், படைப்பாகிய நமக்கும் இடையேயான உறவைப் புதுப்பிக்கும் ஒரு நிகழ்வு. செபத்தில் கடமைக்காகவும், கடனுக்காகவும் பங்கெடுக்காமல் உணர்வுபூர்வமான விதத்தில் ஈடுபாட்டுடன் பங்குபெற அழைக்கப்படுகின்றோம். இன்று நமது உறவு பிறருடன் எப்படிப்பட்டதாக உள்ளது? எமது குடும்ப உறவுநிலை எப்படியாக உள்ளது? நாம் ஈடுபாட்டோடு செபிக்கின்றோமா? ஆலயத்தில் கடவுளோடு நமது உறவுநிலை என்ன...? சிந்திப்போம்; செயற்படுவோம்; வாழ்வில் வளம்பெறுவோம்...

– ஆசிரியர் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் மறைவை அடுத்து தெரிவுசெய்யப்பட்ட திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் உடல்நலமின்மையால் ஓய்வுபெற்றுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 28ம் திகதியுடன் ஓய்வுபெற்றுள்ள அவரது ஓய்வுச்செய்தி வெளியானவுடன் உலகம் முழுவதும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. ஊடகங்கள் அச்செய்தியை வெளியிட்ட விதம் பலரையும் 'என்னவோ, ஏதோ' என்று நினைக்கத் தூண்டியது. ஆயினும் பிந்திய செய்திகள் உண்மை நிலையை உணர்த்தின. இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இயலாமைதான் அவரது ஓய்வுக்குக் காரணம் என்பது தெளிவாகியது. இயலாமையுடன் பதவியில் ஒட்டிக் கொண்டிராமல் வழிவிட்டுக்கொடுக்கும் அவரது பெருந்தன்மையும் புலனாகிறது. திருத்தந்தையாக விளங்கும் ஒருவர் பணிப்பொறுப்பிலிருந்து ஓய்வுபெறுவதென்பது கடந்த 600 ஆண்டுகளில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது.

ஏறத்தாழ கடந்த எட்டு ஆண்டுகளாகத் திருத்தந்தையாகப் பணிபுரிந்த அவர் ஜேர்மன் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஜோசப் இராட்சிங்கர் என்னும் இயற்பெயரைக் கொண்ட இவர் இறையியலில் புலமைமிக்கவர். பல்கலைக்கழகப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். பன்மொழிப் புலமையாளர். பல நூல்களுக்கு ஆசிரியர். திருப்பேரவையில் பொறுப்பான பதவிகளை வகித்தவர். முன்னாள் திருத்தந்தையின் ஆலோசகராகத் திகழ்ந்தவர். வயதானபின்பே – 76 வயதில் திருத்தந்தையாகப் பணிப்பொறுப்பேற்றதால் இவரது பணிக்காலம் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் கழிந்ததை அவதானிக்கலாம்.

தற்போது ஓய்வுபெற்றுள்ள திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தாம் பணிப்பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்றாலும் மக்களுடன் நெருக்கமாகவே இருக்கப்போவதாகக் கூறியுள்ளார். இம்மாத இறுதியில் புதிய திருத்தந்தையின் தெரிவு இடம்பெறுமென வத்திக்கான் தெரிவித்துள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அகத்தியரின் அழகான ஞானம்



"நீங்கள்
சிலுவையில
றைந்த இந்த
இயேசுவை கடவுள்
ஆண்டவரும்
மெசியாவுமாக்கினார்
என்பதை இஸ்ராயேல்
மக்களனைவரும்
அறிந்துகொள்வீர்கள்"

(திருத்தூதர்பணி 2:36)

கிறீஸ்து எல்லா மக்களுடைய பாவங்களையும் இரட்சித்து மீட்கவே வந்தார். அவர் பிறப்பதற்கு முன்பே தீர்க்கதரிசிகள் பலவாறு கூறியுள்ளனர். "மெய்யாகவே அவர் பாவங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமானோம். நம் எல்லாருடைய அக்கிரமங்களையும் அவர் தம்மேல் விழப்பண்ணினார்" என எசாயா புத்தகத்தில் பார்க்கிறோம்.

இதுமட்டுமல்ல, சிமியோன் கூட ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் சாகப் போவதில்லை எனக் காத்திருந்தார். "மக்களனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன" எனக் கூறியுள்ளதையும் வேதாகமத்தில் காணமுடிகிறது. (லூக் 2:26)

மானிடமகன் மனித உயிரை அழிப்பதற்கல்ல மீட்கவே வந்தார். மனிதனைப் படைத்து அவனுக்கு உயிர் மூச்சை ஊதி, உலகில் தம்மால் படைக்கப்பட்ட அனைத்தையும் அவன் ஆளுகைக்கு உட்படுத்தி அவனைச் மகிழ்ச்சியாக வாழவிட்ட கடவுள், ஒரே ஒரு நிபந்தனை மட்டுமே கொடுத்தார். சாத்தானின் தூண்டுதலால் பாவக் கிடங்கில் விழுந்த மனிதனை மீண்டும் ஒப்புரவாக்கி தன்னிடம் சேர்த்துக் கொள்வது இறை திட்டமாக இருந்தது. எனவேதான் தன் ஒரேபேறான மகனை மனிதனாக, மனிதருள் சஞ்சரித்து அவன் சுக துக்கங்களில் பங்குகொண்டு அவனுக்காக அவர் பாடுபட்டு அவனை மீட்டுக் கொள்ள வேண்டுமென திருவுளம் கொண்டதை நான்கு நற்செய்தியாளர் மட்டுமல்ல திருவிவிலியமே பறைசாற்றுகிறது.

இதுமட்டுமல்ல ஏனைய வேதங்களில்கூட (துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம்) துஷ்டர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காகவே பல தெய்வங்கள் பூமியில் அவதரித்தன என்று கூறுவதைக் காண்கிறோம் இருக்கு வேதம், சாம வேதங்களை நோக்கும் போது கூட பிரஜைகளுக்கு அதிபதியாகிய புருஷர் ஒருவர் தன்னையே பலியாக்கி இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிந்தி மனிதரைப் பாவத்திலிருந்து மீட்டுக் கொண்டால்தான் மானிட மக்களுக்கு விமோசனம் உண்டு. இவர் எப்படிப்பட்டவர்? இவர் இலட்சணங்கள் யாவை? இவர் உலகத்திற்கு வந்தாரா? இவரின் குணாதிசயங்கள் யாவை? எனக் கேள்விகளை எழுப்புகின்றன. இத்தனைக்கும் பதில் திருவிவிலியத்திலுண்டு. திருமுழுக்கு யோவானும், "குனிந்து அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை" (மத் 3:11, மாற் 1: 1-8) எனச் சான்று பகர்கின்றார்.

இயேசுவின் குணாதிசயங்களைப் பற்றி கிறிஸ்தவர்கள் அல்லாத ஞானிகளும் கூறியுள்ளனர்.

"வணங்குவாய் ஜெகஜோதி, ஒருவனாகி
மானிடத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதனையும் படைத்த பின்பு
குவலயத்தில் தானுதித்து உருவாய் வந்து
கனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்ட தளம் சென்றவரை அண்டுவாயே"

முழு உலகையும் படைத்த இறைவன் மனிதனையும் படைத்து அந்த மனிதர்கள் மத்தியில் தானும் மனிதனாகப் பிறந்து மனைவி என்று யாருமில்லாமல் சந்நியாசம் காத்து, தனக்குச் சீடர்களை ஏற்படுத்தி, தான் வந்த செய்தியை உலகெங்கும் அறிவிக்கும்படி அவர்களை உலகில் இருத்திவிட்டு அவர் மரித்து மேலுலகம் சென்றுவிட்டார். அப்படிப் பட்டவரைச் சேவிக்கும்படி அகத்திய முனிவர் தமது "அகத்திய ஞானம்" என்னும் நூலில் மிக அழகாகக் கூறியுள்ளார்.



இவர் மட்டுமல்ல பட்டினத்தாரும் தமது பதிகத்தில்,

"கல்லதை வெள்ளியை செம்பை
களிமண்ணால் மிதியிட்டு உருவின குயவன்
கட்டிய கோலமும் கருதேன் - வல்லிரும்
புக்கால் வெள்ளித் தகட்டால் மற்ற
பஞ்சலோகத்தால் வார்த்து அடித்து
வைத்ததுமான வஞ்சிலைகளையும் மதியேன்
செல்லரிக்காத மரத்தினைத் தெரிந்து
சித்திரவேலைகள் சிறந்த பொம்மைகள்
பற்பல படங்கள் செய்து சிந்தையிற்
கனவிலும் மதியேன் எல்லை வாழ்
எனக் கினி ஆகாது உமக்கு நான் அடிமை
யெந்தன் இயேசு நாயகனே"

என்று பாடியுள்ளார். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சரும் தமது வாழ்நாளில் இயேசு பிரானைக் கண்டதாகவும் அவரது குணாதிசயங்கள் பற்றியும் தமது பதிவேட்டில் குறிப்பிட்டுஉள்ளதையும், தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் அகழ்வின்போது (இராஜராஜ சோழன்) எடுக்கப்பட்ட ஏட்டுச்சுவடிகளில் இயேசுவைப் பற்றியும் அவரின் சிலுவை மரணம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதாக இதிகாசங்கள் கூறுகின்றன.

இயேசுவின் இரண்டாம் வருகைக்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும்வேளை - திருவிவிலியத்தில் எழுதப்பட்டவை அனைத்தும் நடந்தேறுகின்றன. உலகில் நடக்கும் அதிர்ச்சியூட்டும் சம்பவங்களை கண்டும் கேட்டும் திகிலுற்று இருக்கும் நாம்

**"குனிந்து அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நம்மைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் "திருடனைப்போல் நான் வருவேன்" என ஆண்டவரே சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் சாவு நிச்சயம். சாவு எந்த ரூபத்திலும் எந்தவேளையிலும் வரலாம். அதை எதிர்கொள்ள நாம் தயாரா...?

இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து தூயவனாக நடப்பவனே பரலோக இராச்சியத்தினுள் பிரவேசிக்க முடியும். நாமும் சிறுபிள்ளை உள்ளத்துடன் கடவுளின் பாதத்தைப் பற்றிப் பிடிக்க வேண்டாமா...? நற்கதியடைய வேண்டாமா...? நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோம்.

■ ஜெ. சிதம்பரி

---

# உயர்நிலைக் காணீர்...!

அருட்பணி N.C. அருள்வரதன்



வாழ்க்கையின்
வடிவங்கள் தான்
எத்தனையோ
அதில்
வளமான நிலைகளுக்கும்
குறைவே இல்லையே
இருந்தாலும்
உண்மைகளை
மறந்துவிட்டு
அநீதிகளை அலங்கரிக்கும்
நியாயமற்ற வாழ்வுகளும்
இல்லாமல் இல்லையே!

பதவிகளைப்
பற்றுதலாய்ப் பற்றிக்கொண்ட
மனிதரிடம்
நியாயத்தைக் கேட்கும்போது
நீதியே கண்கலங்கி நிற்கின்றதே

உண்மைகளைப் பேசுகின்ற
வாய்களெல்லாம்
ஊமைகளாய்
மாறிவிடும் காலமிதில்
அநீதிகளின் ஆர்ப்பரிப்பே
அன்றாடம் கேட்கிறதே!

ஊமைகளாய்க் குருடர்களாய்
செவிடர்களாய் இருந்துவிட்டால்
எவராலும் நமக்கு
எதுவுமே இல்லையே.
ஆனாலும்
எவராலும் எத்தீங்கும்
இல்லை என்றாலும்
அப்படியும் ஒருவாழ்வு
வாழத்தான் வேண்டுமா?

குறுகிய நோக்குகளால்
மனங்களை
குறுகவைத்துச்
செயலாற்றும்போது
குறைகளே
வெளிவரும் என்பதை
மறந்துவிட வேண்டாம்.
உயர்ந்த எண்ணங்கள்
உள்ளத்தில் நிலைகொள்ள
பரந்த எண்ணங்களின்
வெளிவரவால்
பண்பான நிலைகளே உருவாகும்

நமது வார்த்தைகளோ
ஆமென்றால் ஆமென்றும்
இல்லை என்றால்
இல்லை என்றும் கூறும்
உன்னத நிலை என்றால்



உண்மையில் நாமொரு
உயர்வின்
சிகரங்களென்பதை
உணர்ந்துகொண்டே
உண்மைகளை
உலகறியச் செய்வோமே!

நீதி நியாயங்கள்
நிலை கொள்ளவே
காலங்கள்
கடந்தே போனாலும்
மறையாமல் அவை மீண்டும்
நிலை கொண்டே தீரும்
இதை
மறவாமல் பாதைகளில்
வழி நடந்துசெல்ல
துணிவோடு என்றும்
நடைபோடுவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தவக்காலம் தொடங்கிவிட்டது. நாற்பது நாட்களை தவக்காலமாக - நோன்புக் காலமாக திருச்சபை அனுசரிக்கிறது. 40 என்ற எண்ணுக்கு ஒரு மரபு - வழக்காறு உண்டு.

இஸ்ராயேல் மக்களுடைய மரபில் 3, 7, 40 போன்ற எண்கள் நிறைவான எண்களாகக் கருதப்பட்டன. வேறு பல சமூகங்களிலும் இத் தகைய எண்கள் தொடர்பான மரபுகள் உண்டு.

கடவுள் ஆறுநாட்கள் படைப்புத் தொழில் செய்து 7ம் நாள் ஓய்ந்திருந்தார் என்று தொடக்க நூலிலே வாசிக்கிறோம்.

இறைவாக்கினர் யோனா, 3 நாட்கள் இரவும் பகலும் மீனின் வயிற்றிலிருந்தார்.

இயேசு 40 நாட்கள் பாலைவனத்தில் தவம் செய்தார்.

இதுபோல 3 நாட்கள் அல்லது 40 நாட்கள் மருந்து சாப்பிடுவர். "விருந்தும் மருந்தும் 3 நாள்" என்பது ஒரு பழமொழி. 108 முறை மந்திரம் ஜெபிப்பார்கள்.

கிழமையில் 7 நாள், மாதத்தில் 30 நாள், சுரங்கள் 7. இவ்வாறு, குறிப்பிட்ட சில எண்கள் மானிட வாழ்க்கை முறையில் முக்கியத்துவம் பெறுகின்றன.


இஸ்ராயேல் மக்களுக்கும் 40 என்ற எண்ணுக்கும் ஒரு மரபுத் தொடர்ச்சி உண்டு. அதிலிருந்து 40 நாட்கள் தவக்காலம் - அல்லது நோன்புக் காலம் என்பது வந்திருக்க வேண்டும்.

இயேசு, நமது குற்றங்களுக்காக பாடுகள் பட்டு, அவமானப்பட்டு, துன்புற்று உயிர்நீத்த சோகம் நிறைந்த தியாகங்கள் இக்காலத்தில் நினைவுகூரப்படுகின்றன.

ஆகவே, இயேசுவை வதைத்த அந்தக் குற்றங்களிலிருந்து விடுபட்டு, மனம்மாறி, திருந்தி, கடவுளோடு ஒப்புரவாகும் காலம் தவக்காலம் எனக் கருதப்படுகின்றது. தவக்காலத்தின் அடிப் படை நோக்கமே இதுதான். மனமாற்றம் - ஒப்புரவு.

எங்கோ இருக்கும் கடவுளுக்கு எதிராக நாம் என்ன குற்றம் செய்ய முடியும்? ஆனால் கடவுள் எங்கோ இருப்பவர் அல்ல, எங்கும் இருப்பவர்; என்னுள் இருப்ப வர்; உங்களுள் இருப்பவர்; இயற்கை எங்கும் இப்பிரபஞ்சம் எங்கும் நிறைந் திருப்பவர்.

ஆகவே, சக மனிதருக்கெதிராக, சமூகத்துக்கெதிராக, இயற்கைக்கு எதிராக நாம் புரியும் குற்றங்கள் எல்லாமே கடவுளுக்கு எதிரானவை தான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய பத்திரிகையில் "தொண்டன்"

**2012 டிசம்பர் 16ம் திகதி 'தினக்குரல்' வாரப் பத்திரிகையில் நூலறிமுகம் பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் (2012) தொண்டன் இதழ் பற்றி வெளிவந்த குறிப்பு இது.**



**பாலன் பிறப்பை வரவேற்கும் தொண்டன்**

தொண்டன் சமய சமூக இலக்கிய வெளியீடான தொண்டனின் டிசம்பர் இதழ் வெளிவந்துள்ளது. கிறிஸ்துவின் பிறப்பினை ஒட்டியதாக ஆசிரியர் தலையங்கம் அமைந்துள்ளது. 'நம்பிக்கை அளிக்கும் நாயகன் பிறப்பு' கட்டுரை திருத் தந்தையின் மறையுரை அன்பின் அரசி அன்னை தெரசாவின் அம்மானைக் காவியம். வாகரை வாணன் எழுதிய இருள் விலக்கிய இரவு நத்தார் சிறுகதை பிசாசுத் தூதுகள் கட்டுரை மட்டக்களப்பில் தூயவின்சன் டி போல் சபையின் நூற்றாண்டு நிறைவு தொடர்பான கட்டுரை உட்பட பல கட்டுரைகள், தகவல்கள் இலக்கிய கட்டுரைகள், மாணவர் கட்டுரை பரிசுப்போட்டி கவிதைகள் என பல்சுவை அம்சங்களுடன் வெளிவந்திருக்கும் தொண்டன் இதழ் யேசு பாலனின் பிறப்பை சிறப்பிக்கும் வகையில் வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வறைய போராட்டமிக்க மனித வாழ்வில் சமயத்திலும் விழுமியத்திலும் நோக்கமறிந்து இம்மாதம் வெளிவந்துள்ள தொண்டன் இதழில் இளமையில் சமய கருத்தை அறியும் வகையில் விவிலியம் ஏற்போம், பரிசுப்போட்டி பலருக்கும் பயனுள்ளது. அதேபோன்று உலகறியும் வகையில் அறிவை வளர்ப்போம் பரிசுப் போட்டியும் சிறுவர்களுக்கு அத்தியாவசியமானது. இத்தகைய பல தொண்டுகளை நோக்கமாகக் கொண்டு தொண்டன் தொண்டாற்ற வெளிவந்துள்ளது.

ஆசிரியர்:- [illegible]
தொடர்பு:- சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண்:- 44, மட்டக்களப்பு
தொலைபேசி:- 065-2222490
விலை:- 50.00 ரூபா

— வித்யா

அடுத்தவனைப் பார்த்துப் பொறாமைப்படும்போது, அவர்களுக்குரியதைப் பறிக்கும்போது, தர மறுக்கும் போது, அவரது முன்னேற்றத்தைத் தடுக்கும்போது, வேலைத் தளங்களில் கடமையைச் செய்யாது காலம் கழிக்கும்போது, கையூட்டு வாங்கும்போது நாம் குற்றவாளிகள் தானே!

இயற்கைச் - சூழலைப் பாழாக்கும் போது, அநாவசியமாக நிழல்தரும், பழந்தரும் மரங்களைத் தறிக்கும்போது, நீரூற்றாது வாடிச் சாகவிடும்போது, அதிகரித்த நவீன சாதனங்களின் பாவனையால் இயற்கைச் சமநிலையைக் குழப்பும்போது நாம் குற்றவாளிகள்தானே!

கடவுளுக்கு எதிராக நாம் புரியும் குற்றங்கள் ஒவ்வொன்றும் நமக்கு எதிராக நாம் புரியும் குற்றங்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அந்தவகையில், தவக்காலம் என்பது நமது குற்றங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் காலமாகும். நம்மிலிருந்து, நமது குற்றங்களிலிருந்து நாம் விடுபடுவதே கடவுளோடு நாம் கொள்ளும் ஒப்புரவாகவும், புதுவாழ்வாகவும் மாறிவிடுகிறது. இங்கிருந்தே உயிர்ப்பின் வித்துகள் துளிர்க்கின்றன.

நமது பழைய வாழ்வும், பழைமை வாதங்களும் மரணித்து புதிய வாழ்வும், புதிய சிந்தனையும் உயிர்ப்படைகின்றன.

இதனையே, நாம் பாவத்துக்கு இறந்து புண்ணியத்தில் உயிர்க்கவேண்டுமென்பார் பவுலடியார்.

ஆக, தவக்காலம் நமது விலங்குகளை நாமே உடைத்து ஒரு புதுவாழ்வை நோக்கி நடக்கும் பாதை.

இந்த உடைப்பிலும், நடையிலும் வலியுண்டு, துன்பமுண்டு, வேதனையுண்டு, ஏன் மரணமும் உண்டு.

இயேசுவின் பாடுகளும் மரணமும் இதைத்தானே சொல்கின்றன!

இயேசு தமக்குள் இருந்த தெய்வீகத்தை வளர்த்தார். அதன் ஆற்றலையும், தாற்பரியத்தையும் தமது அன்பின், தியாகத்தினூடாக வெளிப்படுத்தினார். இறுதியில் அதன் நிறைவை தாமும் அனுபவித்து, மற்றவரும் அனுபவிக்கலாம் என்ற நம்பிக்கையை விதைத்தார்.

எனவே, தவக்காலம் நமக்கு ஓர் அழைப்பு விடுக்கிறது. நமக்குள் புதைந்திருக்கும் தெய்வீகத்தை வளர்க்க, நம்மை அடிமைப்படுத்தும் விலங்குகளை உடைக்க, விடுதலை பெற்ற மக்களாக வாழ அழைக்கிறது. வேண்டுமென்றால்,

சிலுவைப் பாதை சுத்துங்கள்!
செபமாலை சொல்லுங்கள்!
ஒரு சந்தி பிடியுங்கள்!
உபவாசம் இருங்கள்!
யார் வேண்டாமென்றார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அன்பின் அரசி அன்னை தெரசாவின் அம்மானைக் காவியம்

15

கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று மூன்றிலே
குளியலறை சென்ற அன்னை தெரசாவும்
வழுக்கியே விழுந்து இடுப்பது உடைந்ததால்
இயலாமல் உபாதையும் பட்டாரே அன்னையும்
நடப்பதற் கன்னையும் சிரமமே பட்டதால்
மேற்கொண்டு பதவியில் இருந்திட முடியாமல்
வேறு ஒருவரையே அமர்த்திட வேண்டுமென
முடிவினை எடுத்தாரே அன்னையும் அம்மானை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஏழு
மார்ச் மாத பதின்மூன்றில் மாற்றமது செய்தார்
அன்னையின் அன்பாலே கவரப்பட்டவரான
நிர்மலா என்னுமோர் சகோதரியிடத்தே
அறக்கட்டளை தன்னையே ஒப்படைத்த பின்னே
சாதாரண தொண்டராய் மாறிய அன்னையும்
இடைவிடா பணியை ஆற்றியே வந்ததால்
தடையின்றி இல்லங்கள் இயங்கின அம்மானை

பத்திரிகையாளர்கள் பேட்டி பெற வந்தே
பதிலது பெற்றனர் அன்னையின் திருவாயால்
கடவுள் தந்த வரம் என்னவென வினவிடவே
ஏழைகள் தானென்றே பதிலது பகன்றாரே
எப்படி நீங்களும் இதனைச் சொல்வீர்களென
ஏழைகளுக்கான பணி இயேசுவுக்காய் என்றாரே
எதிர்காலத் திட்டங்கள் என்னம்மா எனக்கேட்க
ஏழைகள் நோயாளிகள் நலனுக்காய் என்றாரே!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஏழு
செப்டம்பர் ஐந்து அதிகாலை கண்விழிக்க
அன்னை தெரசா அவர் உட்கார்ந்திருக்காமல்
படுத்த படுக்கையாய்ப் படுக்கையில் இருந்தாரே
அன்னையின் அழகுமுகம் வாடி வதங்கியதை
அனைவரும் பார்த்தபடி அங்கே இருக்கையிலே
அஸீம்பர்தன் என்றதொரு மருத்துவர் தான்வந்தே
அன்னைக்குச் சிகிச்சைதனை அளித்தாரே அம்மானை.

அன்று மாதத்தின் முதல்வெள்ளி ஆனதனால்
வழமையாய்க் காலையில் தியானிப்பார் உணவின்றி
மதியவேளை உணவுநேரம் வந்திட்ட போதே
அசதியாய் உணவினை உட்கொண்டார் அம்மானை
அரண்டு புரண்டபடி கண்தூங்கி விழித்திருக்க
அருகருகாய் மருத்துவர்கள் பார்த்தபடி இருக்கையிலே
அடுத்தடுத்து நெஞ்சுவலி அன்னையைத் தாக்கியதால்
அவதியும் பட்டாரே அன்னையும் அம்மானை

அவ்வேளை இரவுமணி ஒன்பது முப்பதாகும்
அங்கிருந்தோர் மனம்பதறிக் கலங்கி நின்றனரே
அவசர அவசரமாய்ச் சிகிச்சை நடந்திருக்க
அன்னை தெரசாவின் இறுதியான வார்த்தைகளோ
இயேசுவே இயேசுவே நெஞ்சுதான் வலிக்கிறதே
மெல்லிய குரலாலே மொழிந்தாரே இயேசுவிடம்
எல்லோரும் பார்த்திருக்க இதயமது ஓய்ந்ததனால்
மெல்லக் கண்மூடி அடங்கினார் அன்னையவர்.

- தொடரும் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




-நில்மினி கஜேந்திரன்-

## கீழைத்தேய நாடுகளில் ஒன்றான சீனாவில் திருச்சபை பரவுதல்

கோவாவில் இருந்து வந்த பிரான்சிஸ்கு சவேரியார் வாசனைத் திரவியங்களின் நாடான மொலுக்காசிலும், ஜப்பானிலும் மறைபோதகப் பணியில் ஈடுபட்டார். அங்கிருந்து சீனாவிற்குச் செல்ல ஆயத்த மாகிக் கொண்டிருந்தவேளையில் ஒருவகைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சான்சியன் தீவில் 1552ல் மரணமானார். ஆயினும், இவர் இறக்க முன்னர் தன் சபையினருக்குள், சீனாவிற்குள் நுழைந்து மறை போதகப் பணி ஆற்ற வேண்டும் எனும் ஆர்வத்தைப் புகுத்தியிருந்தார்.

இருப்பினும் கடந்த முப்பது ஆண்டுகளாய் அவரது ஆசை நிறைவேற பல தடைகள் ஏற்பட்டி ருந்தன. இறுதியில் 1578ல் சில போர்த்துக்கேய வணிகர் கள் தமது வணிகத் தொழில் சம்பந்தமாக சீனாவிலுள்ள காண்டன் நகரில் தங்கியிருந்து செயலாற்ற சீன அதிகாரிக ளின் அனுமதி பெற்றனர். இவர்களைத் தொடர்ந்து மூன்று இயேசு சபைக் குருக்களும் சீனாவுக்குள் நுழைந்தனர். இவர்களில் பிரசித்தி பெற்ற குருவான மத்தேயு ரிச்சி ஒருவராவார்.

இவர் 1552ல் இத்தாலியில் பிறந்தவராவார். எண் கணிதம், கணிதம், வானசாஸ்திரம், புவியியல், இசை, சித்தாந்தம் போன்ற பல்துறை வித்தகராய் விளங்கினார். 1583ல் சீன அதிகாரிகளின் அனுமதியுடன் பணியாற்ற சீனாவிற்குள் நுழைந்தார். இவர் தனது தயாரிப்பான உலகப் படம், கடிகாரம், தொழிநுட்பக் கருவிகள், இசைக் கருவிகள் போன்றவற்றைக் காண்பித்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி, படிப்படியாக அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து தம்முடன் இணைத்துக் கொண்டார். தாம் ஏழ்மையானவர்கள் எனக் காண்பிக்கும் முகமாய் புத்த பிக்குகளைப்போல காவி உடை அணிந்து மறைபணி ஆற்றினார்.

மத்தேயு ரிச்சி இயேசுசபையைச் சேர்ந்தவர். ஆகையால் கலையிலும், விஞ்ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற ஒருவரைத் தம்முடன் இணைத்துக் கொண்டார். சீன மக்களின் கலாசாரப் பண்பை மதித்து வாழ்ந்தார். சீன அறிஞர்களின் உடைகளை அணிந்து, சீனப் பழக்க வழக்கங் களையும் பின்பற்றினார். சீன மொழியைக் கற்று அதில் பாண்டித்தியம் பெற்று தமது கலைகளை அம்மொழி மூலம் எழுதினார். இவர் எழுதிய "உண்மை இறைக் கோட்பாடு" எனும் நூல் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இவைகள் மூலம் சீன மக்களை கொன்பூசியுசை இறைவனாக அல்ல, சிறப்பான அறிஞராய் ஏற்றுக்கொள்ளச் செய்தார். 1610ல் 6000 இற்கும் மேற்பட்ட சீன மக்களை கத்தோலிக்க மதத்தைத் தழுவச் செய்தார். மத்தேயு ரிச்சி 28 ஆண்டுகள் சீனாவில் மறை பணியாற்றி 1611ல் பீக்கிங்கில் மரித்தார்.


இவருக்குப் பின் ஜேர்மனியைச் சேர்ந்த ஜான் அடம் ஷால் எனும் யேசுசபைக் குருவான வர் பணியைத் தொடர்ந்தார். இவரும் ரிச்சியைப் போல் பல்துறையில் வல்லவராவார். இதன்மூலம் பேரரசர் சாண் இவரை வான்வெளி ஆய்வு, கணித நிறுவனத்தின் தலைவராக நியமித்தார். இவரின் காலத்தில் கிறிஸ்தவ மறைபோதகத்திற்கு ஆதரவு கிடைத்தது. 1615ல் திருத்தந்தை 5ம் பவுல் சீனக்குருக்களுக்கு தம் சொந்த மொழியில் செபிக்க, திருப்பலி ஒப்புக்கொடுக்க, அருட்சாதனம் வழங்க அனுமதி அளித்தார். இதனைத் தொடர்ந்து, பிரான்சிஸ்கன், டொமினிக்கன் துறவற சபையினரும் சீனா வந்து மறை பணிகளில் ஈடுபட்டனர். இதனால், 1650ல் கிறிஸ்தவர் தொகை சீனாவில் 150,000 ஆக அதிகரித்தது. 1666ல் இவரும் மரணமானார்.

பின்னர், சேவியர் பிலிடெல் எனும் இயேசுசபைக் குருவின் பல்வேறுபட்ட பணிமூலம் சீனாவில் நற்செய்தி பரப்பப்பட்டது. 300,000 ஆக கத்தோலிக்கர் தொகை அதிகரித்தது. காலப் போக்கில் இயேசு சபையினருக்கும், சீனருக்கு மிடையே சில கருத்து வேறுபாடுகளின் நிமித்தம் திருத்தந்தை 11வது கிளமென்ற் சீனப் பண்பாட்டு முறைகளில் வழிபட தடைகள் விதித்தார். இதன் நிமித்தம் பேரரசரால் கிறிஸ்தவம் சீனாவில் போதிக்கத் தடை விதிக்கப்பட்டது. இதனால்,

13ம் பக். பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




ஈழத்து தமிழ் வாசகர்களாயினும் சரி, புலம்பெயர் வாழ் தமிழ் வாசகர்களாயினும் சரி நூலகவியலாளர் திரு. என். செல்வராஜாவை அறியாதவர்கள் இருக்க முடியாது. இலண்டனில் இருக்கும் இவர், மட்டுப்படுத்தப்பட்ட சுயநிதிவளத்துடன் தனிமனித முயற்சியாகப் பல தமிழியல் ஆய்வுகளையும் இலக்கியத் தேடல்களையும் வரலாற்றுப் பதிவுகளையும் செய்து வருகின்றார். உலகளாவிய ரீதியில் ஈழத்தவர்களின் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் இதுவரை 5000க்கும் மேற்பட்ட நூல்களை 'நூல் தேட்டம்' என்ற மகுடத்தில் ஐந்து தொகுதிகளாக வெளியிட்டதோடு, முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டுள்ளார்.

என். செல்வராஜா **'ஞானம்'** வாசகர்களுக்குப் புதியவரல்லர். ஞானம் சஞ்சிகை தொடங்கிய காலத்திலிருந்தே அதனுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பல கட்டுரைகளை எழுதியிருக்கும் இவர், நீண்டகாலமாகப் 'புகலிடக்கலை இலக்கிய நிகழ்வுகள்' என்ற தலைப்பில் ஒரு பகுதியையும் எழுதிவருகின்றார்.

"வேரோடி விழுதெறிந்து ..." என்ற இந்த நூல் இலங்கை, மலேசியா, ஐரோப்பா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வெளியாகும் சஞ்சிகைகளில், வார இதழ்களில், இணையத் தளங்களில் இவர் எழுதிய கட்டுரைகளிலிருந்தும் IBC - அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இவர் நிகழ்த்திய வானொலி உரைகளுக்காக இவர் தயாரித்த பிரதிகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது கட்டுரைகளின் தொகுப்பாகும்.

இவ்வாறு, என். செல்வராஜா எழுதிய 'வேரோடி விழுதெறிந்து..." என்னும் நூலிற்கான பதிப்புரையில் 'ஞானம்' பதிப்பக தி. ஞானசேகரம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**தாயகம்** என்னும் பகுதியில் ஈழத்தின் வட புலப்பெயர்வும், அது தொடர்பான இலக்கியங்களும், ஈழத்தமிழரின் போர்க்காலப் பிரசுரங்களும் போராட்ட இலக்கியங்களும், ஈழத்தவரின் சுனாமி இலக்கியங்கள் என்பன உட்பட ஏழு கட்டுரைகளும், **அயலகம்** என்னும் பகுதியில் சிங்கப்பூர், மலேசியாவிலிருந்து வெளிவரும் தமிழ் இலக்கிய வெளியீடுகள் தொடர்பான ஆறு கட்டுரைகளும், **புகலிடம்** என்னும் பகுதியில் பிரித்தானியா, பின்லாந்து, ஜேர்மன் போன்ற நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் இலக்கியங்கள் சம்பந்தமான ஏழு கட்டுரைகளும் சுவைபட, ஆராய்வு நோக்கோடு எழுதப்பட்டுள்ளன.

'எரிப்பதால் வரலாற்றை திருத்தி எழுத முடியுமா...?' என்ற கட்டுரையில் நூலகங்கள், நூல்கள் எரிக்கப்பட்ட வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.மு. 213ல் சீனச் சக்கரவர்த்தி Shik Huang -ti என்பவர் சீனப் பெருஞ்சுவரைக் கட்டுவதன் முன்னோடியாக இருந்தவர். தன் ஆட்சிக்காலத்தில்தான் சீன வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற ஆணவத்தால் சகல வரலாற்று நூல்களையும் எரிக்க உத்தரவிட்டார்.

கிரேக்கத்தில் அலெக்சாந்திரியா நூலகம் கி.மு. 283ல் பல்லாயிரம் ஆவணச் சேகரிப்புகளால் பெருமை பெற்றிருந்தது. எனினும் படையெடுப்புகளால் அவை சேதமாக்கப்பட்டன.

- தொடர் 20ம் பக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கவிதை



# ஞானமும் ஊனமும்

அ. ச. பாய்வா

உடலது போலுன்
உள்ளமும் இருட்டு
மனிதமோ உன்னில்
கேள்வியின் விளிம்பில்
படம் பிரித்தாடும்
பாம்பு நீ: அழகு உன்
உளமெனும் பொய்கையில்
உறைவதோ நச்சு

புறமதைத் தீண்டும்
புனிதமென் ஆடை
அகமதில் கந்தல்
அனைத்துமே வேடம்
இறைமகன் வாழ்ந்து
உலகினுக்கிட்ட
தடமதில் வாழ்வின்
விடம் சொரிந்தாய் நீ

அடிமனத் தேடல்
அதன் கனி 'ஞானம்'
மனஞ்சுரந்தேகும்
இசைவழி 'ஞானம்'
ஆழ்மனம் உணர்த்தும்
தனிமொழி 'ஞானம்'
அறிவிலி உரைத்திடும்
புனைமொழி 'ஊனம்'

ஆதியில் வார்த்தை
அழகுறச் சொன்ன
நீதியை நீக்கி
நிழலினைத் தேடி
ஓதிடும் வேதம்
உலகினுக்கொப்பா...?
வேதியல் கற்றுத்
தெளிந்தனை பொய்யா...?

ஆலயம் நமது மெய்
உறவதன் சாட்சி
பகிர்வதும் கொடுப்பதும்
பலியதன் மாட்சி:
அயலவன் உறவினில்
நிறைவினை எய்தி
பலியிடச் சொல்வது
பரமனின் செய்தி.

உடலதில் பூசும்
சாம்பரின் வாசம்
உலர்ந்திடும் முன்னுன்
ஆணவம் தோற்கனும்
சருகெனத் தன்னை
உணர்ந்தவன் வாழ்வான்
தலைக்கனத்தாரேல்
தடம்புரண் டோய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# செபமும் தவமும்

தவக்காலம் தியானிக்கின்ற ஒரு காலமாக இருக்கின்றது. இறை வார்த்தைகளை, அவர்தம் பாடுகளை, மீட்பின் வரலாற்றினை, நமக்குக் கிடைத்த நன்மைகளைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்த்து இறைவனை மனதிருத்திச் செபிக்கின்ற காலமாக இது அமைகின்றது. இந்த செபத்தோடு தவமும் இணைந்து கொள்ளாவிட்டால் அந்த செபத்தில் அதிகம் பலன் இருக்காது.

தவத்தில் அதுவும் குறிப்பாக இந்தத் தவக்காலத்தில் கிடைத்த நன்மைகளைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்த்து இறைவனை மனதிருத்திச் செபிக்கின்ற காலமாக இது அமைகின்றது. வயது வந்தவர்கள் அனைவரும் வாழ்வில் ஆண் பெண் பேதம் பாராது, வயது வித்தியாசம் பாராது... தவத்தில் அதுவும் குறிப்பாக இந்தத் தவக்காலத்தில் – ஒறுத்தல் முயற்சிகள், ஒரு சந்தி, சுத்த போசனம் என்பவற்றை அனுசரிப்பது அவசியமானது. சிறுபராயம் முதற்கொண்டு எம்மவர்களை ஊக்குவித்து இந்த ஆன்மீக செயற்பாட்டில் இறக்கி தம் முயற்சியின் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ளப்பண்ணுவது ஒவ்வொரு பெற்றோரதும் கடமையாகும். இன்றைய காலகட்டத்தில் இந்த ஒருசந்தி, சுத்த போசனம் எல்லாம், காலத்திற்கொவ்வாதது, நடைமுறைக்குப் பொருந்தாது என்ற கருத்துகள் நிலவுவது நமக்குத் தெரியும். பெரும்பாலானவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் இந்த அலட்சியப் போக்கினைக் கொண்டிராமலில்லை.

நாம் எம் குடும்பத்தில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்துகொள்ள வேண்டியது அவசியம்! வெறுமனே ஆன்மீகம் சம்பந்தப்பட்டது என்ற ரீதியில் மட்டும் இதனை நோக்காது, உளரீதியாகவும் சுய கட்டுப்பாடு, சுய ஒழுக்கம், மன அமைதி, உடல் நலம் என்பனவற்றை நம்மில் வளர்க்கின்ற கருவியாகவும் ஒருசந்தி முயற்சிகளை நாம் அணுகவேண்டும்.

ஒருவேளை குறைந்த உணவு உட்கொண்டும், இடைப்பட்ட நேரத்தில் மனம்

> "தனக்கு உணவு
> தேடுவது உலகியல்
> கண்ணோட்டம்;
> அடுத்தவர்க்கு உணவு
> தேடுவது ஆன்மீகக்
> கண்ணோட்டம்"
>
> - நிகோலஸ் பெர்ட்வே -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தூண்டினாலும் தேனீர் வகைக ளைத் தவிர்த்தும் இந்த முயற்சி களை நாம் மேற்கொள்வதால் பல நன்மைகளை அனுபவிக்க முடியும். வெறும் வயிற்றில் இறைவனை தியானிப்பதும், செபிப்பதும் எப்படி என்று கேட்பதெல்லாம் வெறும் சாக்குப் போக்காகவே இருக்கும். வெறும் வயிற்று நிலை மனம் தியானிக்கக்கூடிய சூழலை உருவாக்கித் தரும். இல்லாத வன் பசியை எண்ணிப் பார்க்கச் செய்யும், அந்த இல்லாதவன் பசியும், வேதனையும் தனக் கில்லை என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கச் செய்யும், அந்த நிலையை உருவாக்கித் தந்தவர்களை எண்ணி மனதள விலாவது வணக்கம் செலுத்த வைக்கும்.

அதேசமயத்தில் இந்த ஒரு சந்தி, சுத்தபோசனம் அதாவது மாமிச வகைகளற்ற உணவு எடுப்பது வெறுமனே பணத்தை மீதப்படுத்தவோ, செலவைக் குறைக்கவோ பயன் படுத்தும் ஒரு வழியாக நாம் கையாள்வது முற்றிலும் தவறா னது. மாறாக, இதிலே மீதமா வது பரித்தியாகம் செய்யப் படாவிட்டால் அல்லது இல்லாத வனோடு பகிரப்படாவிட்டால் அது வீணே! பகிர்தல் என்பது இந்தத் தவக்காலத்தின் முக்கிய அம்சமாக அமையாது போனால் எமது பக்தி முயற்சிகள் பலன் தராது போய்விடும். தாம் உயிர்த்த பின்னர் தம்மைக் கண்டும் புரிந்துகொள்ள முடியா மற்போன சீடர்களுக்கு எம்மா வுஸ் பயணத்தில் உணவை ஆசீர்வதித்து பகிர்ந்து கொடுத்தபோதும், இயேசுவினுடைய பணிகளை யெல்லாம் - போதனைகளை யெல்லாம் மூட்டைகட்டிப் போட்டுவிட்டு வலைகளைத் தூசு தட்டி எடுத்து மீன் பிடிக் கச் சென்ற பேதுரு போன்ற சீடர்களுக்கும் - அவர் சொற் படி பிடித்த மீன்களைப் பகிர்ந்து கொடுத்த போதும் அவர்கள் கண்களைத் திறந்து தம்மைப் புரிந்துகொள்ளச் செய்தார். அவர்களது புறக் கண்களை மட்டுமல்ல அகக் கண்களையும் திறக்கப் பண்ணினார்.

உயிர்த்த ஞாயிறு விழா வுக்குச் செய்த ஒரு சந்தி சுத்த போசன முயற்சிகளின் சிகரமாக, வெற்றிக் கொண்டாட்டமாக என்ன ஆடைகளை வாங்கி உடுத்துவதென்றோ, என்ன வகையான உணவைத் தயாரித்து உண்பதென்றோ, யாரையெல்லாம் அழைத்து விருந்து போடுவ தென்றோ நாம் சிந்தித்துக் கொண்டிருந்தால் அது தவக்காலத்திற்குரிய சிந்தனையாகவோ, அதன் பலாபலனைப் பெற்றுத்தரும் வழியாகவோ அமையப்போவதில்லை. இல்லா தவன் வீட்டில் என்ன உணவு என்பதை எண்ணிப் பார்ப்பது வும், அவனது குடும்பம் மகிழும் படியாக நமது உணவையோ வளத்தையோ அவர்களுடன் பகிர்ந்து கொள்வதும் மட்டும் தான் மீட்பின் பாடுகளின் பலா பலனை நமக்குப் பெற்றுத்தரும்.

உயிர்ப்பு விழாவன்று என்ன வகையான ஆடம்பர உடைகளை வாங்கிக் கொள் வது என்று திட்டமிடுதலை →

9ம் பக். தொடர்..

சீன சபைகளில் வீழ்ச்சி காணப்பட்டது. இக்காலங்களில் சீனாவில் 93 மறை பரப்பாளர்களும் 125,000 கத்தோலிக் கர்களும் காணப்பட்டனர். இவ்வாறு இயேசு சபையினரின் ஆர்வத்தால் ஆரம்பத்தில் அதிகரித்தாலும் சில முரண்பாடுகளினால் காலப்போக்கில் மறைபணி மந்த நிலையி லேயே காணப்பட்டதை அவதா னிக்க முடிகிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருநீற்றுப் புதன்

திருநீற்றுப் புதன் முதல் பெரிய சனிக் கிழமை வரையிலான நாற்பது நாட் களை தவக்காலம் என அழைப்பர். உரோமைத் திருச்சபையில் இலத்தீன் சொல்லான 'குவாட்ரா ஜெசிமா' என்ற சொல்லே முதலில் பாவனையில் இருந் துள்ளது. இதிலிருந்து வந்த 'குரோசிமக் காலம்' என்ற சொல்லே தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் முன்னர் வழங்கி வந்தது.

இஸ்ராயேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் பயணித்த [illegible] மற்றும் இறைவாக்கினர் யோனா போன்றவர்களின் வாழ்வைக் கூறும் விவிலியப் பின்புலத்தில் நாற்பது நாட்கள் பொருள் காணப்பட்டன.

இக்காலம் மறைமெய்மைக்கு வழி நடத்துங்காலம் என ஆரம்பகாலத் திருச்சபை கருத்தில் கொண்டதால் இக்காலத்தில் திருச்சபையில் புதிதாக இணைபவர்களுக்கு ஆயத்த காலமாக, படிப்படியாக மறைக்கல்வி ஊட்டப்பட்டு புனித வாரத்தில் பெரியசனி அன்று திருமுழுக்கு வழங்கப் பட்டது.

தொடர்ந்து, பலரும் கிறிஸ்தவத்தைத் தழுவ முன்வந்தபோது தவக்காலத்தில் கடுமையான தவமுயற்சிகள் முன்வைக்கப்பட்டன. நோன்பு முறைகள் இயேசுவின் பாடுகள் மரணத்தோடு அடையாளப்படுத்தியதன் மூலம் பொருள் பெற்றன. கடவுளோடும் தன்னோடும், பிறரோடும் ஒப்புரவாகுதல் என்ற கருத்தில் தபசுகாலம் அமைந்தது.

நோன்பு அனுசரிப்பதில் தொடக்ககாலத் திருச்சபையில் இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. மத்திய காலங்களில் இறைச்சி, முட்டை மற்றும் பால் பொருட்கள் தவிர்க்கப்பட்டன.

இன்று தலத்திருச்சபையில் ஆயர்கள் கூடி நோன்பு நாட்களைத் தீர்மானிக்கின்றனர். திருச்சபைச் சட்டப்படி வயது வந்தோரும் 60 வயதுக்குக் குறைந்தோரும் நோன்பிருக்கலாம் என வரைய றுக்கப்பட்டுள்ளது.

உடல் பலத்தைப் பேண ஒரு வேளை முழு உணவும், இரு வேளை சிறிய உணவுகளும் எடுக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

**- தொகுப்பு : இன்பம் -**

→

விட, அடுத்தவன் எதை உடுப்பான் என்று சிந்திப்பதும் சிந்தனையோடு அது நின்றுவிடாமல் அதற்காக நாம் சேகரிக்கின்ற பணத்தை, ஏற்பாடு பண்ணுகின்ற பணத்தை அந்த அயலவனுடன் பகிர்ந்துகொள்ள முன்வருகின்றபோதும் தான் உயிர்ப்பு விழாவின் மகத்துவம் நம் வாழ்வில் ஒளியேற்றும். ஏனெனில் மற்றவர்க்கு வாழ்வில் விமோசனம் தரவே இயேசு தன்னுயிரைப் பலியாக்கி நின்றார். அவர் வழியில் சிறிதளவாவது நாம் செயற்படாவிட்டால் நாம் வாழ்வதில் பயனேதும் இருக்கப் போவதில்லை.

செபத்தோடும், பக்தி முயற்சிகளோடும் கிறீஸ்துவின் பாடுகளைத் தியானிப்பதுடன் பகிரும் உள்ளத்துடனும் தபசு காலத்தை நாம் கடந்து செல்வோம்.

**- ஆனந்த ஏ. ஜீ. இராஜேந்திரம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டனின் சில நிமிடங்கள் .....

- ஆழியோன் -

இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' நாம் சந்திப்பது, குட்டித்தம்பி காண்டீபன் ரிஷிகேஷன் அவர்களை. துரு துரு என்ற கண்களும், சாந்தமான முகமும், பணிவும் அதேவேளை சுட்டித்தனமும் நிறைந்த இச்சிறுவன் 'சக்தியின் ஜூனியர் சுப்பஸ்டார்' நிகழ்ச்சியில் இறுதி ஆறுபேர் கொண்ட சுற்றுவரை முன்னேறியவர் என்பது மட்டுமல்லாமல், அவர்களில் மிகவும் இளையவர்: ஆனால், தொலைக்காட்சித் திரையில் பிரமாண்டமாக அசத்தியவர்.

- **தம்பி! உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?**

என்னுடைய பெயர் காண்டீபன் ரிஷிகேஷன். நான் 7ம் வகுப்பு படிக்கிறேன். போட்டிக் காலத்தில் ஆறாம் வகுப்பு. மட்டக்களப்பு புனித. மிக்கேல் கல்லூரியில்தான் படிக்கிறேன். அப்பா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளராகப் பணியாற்றுகிறார். அம்மா, கச்சேரி திட்டமிடல் பிரிவில் வேலைசெய்கின்றார். நாங்கள் மூன்று பிள்ளைகள். நான் நடுவில். (கை கட்டித்தான் பதில் சொல்கின்றார்)



- **உங்கள் பாடும் ஆற்றல் பற்றிச் சொல்லுங்கள்?**

நான் சின்ன வயதில் இருந்தே நன்றாக 'தேவாரம்' பாடுவேன். அப்படித்தான் பாடிப் பழகினேன்.

- **நீங்கள் முறைப்படி சங்கீதம் படிக்கிறீர்களா...?**

வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் கர்நாடக சங்கீதம் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

- **உங்கள் போட்டி அனுபவங்கள் பற்றிச் சொல்லுங்களேன்...?**

மட்டக்களப்பு கல்லடி உணவுவிடுதியொன்றில் ஆரம்பத் தெரிவுப்போட்டி இடம்பெற்றது. நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றினார்கள். அதில் நான் தெரிவுசெய்யப்பட்டேன். பின்னர் நாடு முழுவதிலும் இருந்து 50 போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து அவர்களிலிருந்து 24பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அடுத்து 12பேர் வடித்தெடுக்கப்பட்டனர். அப்பன்னிருவரில் இருந்து 10 பேர், பின்னர் 8 பேர், பிறகு 6 பேர் எனத் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டிக்கு 4 பேர் தெரிவாகினர்.

- **நீங்கள் எத்தனையாவது சுற்றுவரை முன்னேறியிருந்தீர்கள்...?**

இறுதி ஆறுபேர் கொண்ட சுற்றுவரை.

"உங்களுள் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொணரவேண்டும், தயங்கக்கூடாது: படிப்பையும் குழப்பிக்கொள்ளக்கூடாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"இந்த உலகம் மிகப் பெரிய உடற்பயிற்சிக்கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்."

– சுவாமி விவேகானந்தர் –

- **நீங்கள் அழகிய, விதவிதமான ஆடைகளில் எல்லாம் தொலைக்காட்சியில் தோன்றினீர்களே! இதையெல்லாம் அனுசரணையாளர்களா தந்தார்கள்...?**

இல்லையில்லை, அப்பா, அம்மாதான் வாங்கித் தந்தார்கள்.

- **பாடல்களையெல்லாம் எவ்வாறு தெரிவுசெய்தீர்கள்...?**

அம்மாதான் பாட்டெல்லாம் தெரிவுசெய்தவ.

- **பாடல்களையெல்லாம் எங்கிருந்து பெற்றீர்கள்...?**

இணையம், பாட்டுப் புத்தகங்கள் என்பனவற்றில் இருந்து பெற்றோம். அவற்றை MP3ல் போட்டுக் கேட்டுக் கேட்டு பயற்சிபெற்றேன். அப்பா, அம்மா உடன்பிறப்புகள் உதவினர்.

- **மேடையில் பாடுவதற்கு எப்படி பயிற்சிகள் ஒத்திகைகள் மேற்கொண்டீர்கள்...?**

முதலில் இசை வழங்கிய குழுவினரின் வீடுகளுக்குச் சென்று பயிற்சிபெறவேண்டும்: பின்னர் ரத்மலானை கலையரங்கத்திற்குச்சென்று காலையில் ஒத்திகை செய்வோம்: மாலையில் ஒளிப்பதிவு இடம்பெறும்.

- **அப்படியானால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு எத்தனை நாட்களில் ஒளிபரப்புவார்கள்...?**

ஓரிரு வாரங்களில், சிலவேளைகளில் நாலைந்து நாட்களில்...

- **ஒளிப்பதிவு நடக்கும்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது...?**

கொஞ்சம் டென்ஷன்தான்: என்றாலும் போட்டி போட்டு வெல்லவேணும் என்ற ஆசையும் மனநிலையும் இருந்தது. அப்பா, அம்மாவுக்கும் பெருமை தேடிக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் உறுதியாய் இருந்தது.

- **இறுதிப் பகுதிகளில் உங்களையும் அப்பா, அம்மாவையும், வீடு, கடற்கரை என்றெல்லாம் காட்டினார்களே...! மட்டக்களப்பிற்கு வந்து ஒளிப்பதிவு செய்தார்களா...?**

அவை கொழும்பில் ஒளிப்பதிவு செய்யப்பட்டன.

- **இறுதி நிகழ்ச்சியில் மேடையில், நேரடி ஒளிபரப்பில் உங்களைக் காணவில்லையே.... ஏன்?**

பாடங்கள் வகுப்புகள் அடிபட்டு போகின்ற காரணத்தால்தான்.

- **இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றியமைக்காக, வெற்றியாளனாகத் திகழ்ந்தமைக்காக யாருக்கு நன்றி சொல்ல விரும்புகின்றீர்கள்...?**

முதல்ல அப்பா, அம்மா, சகோதரங்களுக்குத்தான். எனக்காக தங்கட நேரங்கள செலவுசெய்தாங்க. தியாகம் செய்தாங்க. இரண்டு லட்சம் ரூபாவை யாவது செலவுசெய்திருப்பாங்க. பிறகு என்னை வளர்த்துவிட்ட பாடசாலைக்கு நன்றி சொல்லணும். தொலைக்காட்சி நிறுவனம், இசையமைப்பாளர்கள், நடுவர்கள் என்றெல்லாம் அனைவருக்கும்... குறிப்பாக, கொழும்பில் எங்களை ஆதரித்த உறவினர்களுக்கும்.

- **இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகவில்லை என்ற வருத்தம் இருந்ததா...?**

கொஞ்சம் இருந்ததுதான்.

- **உங்களைப்போன்ற சிறுவர், சிறுமிகளுக்கு நீங்க சொல்ல விரும்புவது என்ன...?**

உங்களுக்குள் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொணரவேண்டும்: தயங்கக் கூடாது. அத்துடன் எக்காரணம் கொண்டும் படிப்பைக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

'தொண்டனின் சில நிமிடங்களில்' பேட்டிதந்த மிகவும் இளையவர் இவர்தான். (2001ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி பிறந்தவர்) கண்களை உருட்டியும், சிமிட்டியும் பேட்டிதந்த அழகே தனி. அவருக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இறையியற்கை

பிரபஞ்சத்தின் அழகெல்லாம்
எதை உணர்த்தும்...?

கோடி கோடி அற்புதங்கள் படைக்கும்
சூரிய சந்திரரும்
அளவிடற்கரிய வெள்ளிகளும்
ஏது பகரும்?
எதனைப் பறைசாற்றும்...?

உலகின் அதிசயங்களனைத்தும்
ஒளியாய் – வளியாய் – வெளியாய்த்
துலங்கும் இறைவனையன்றோ
இவை அனைத்தும் உணர்த்தும்!

# அர்த்தமில்லா 'சும்மா'

எதை நினைத்து இயற்கை
எம்மை வஞ்சிக்கிறது ....
மனிதத்தை மறந்து
மனிதனைப் பீற்றும்
மானிடனைப் பழிவாங்கவென்றோ...?
பஞ்ச பூதங்களும்
பகை கொள்ளலாயின...
ஆயின் ~
ஏதும் உணர்கிறோமோவெனில்.
'சும்மா...'
என்று சொல்லைப்போல்
'இல்லை' என்பதே
அர்த்தமாகும்!





கண. மகேஸ்வரன்

# கவிதைகள் 3

# அதிகாரம்



அதிகார வெறி வந்தால்
அனைத்தும் ஆடிப்போகும்
அர்த்தமிலா ஆள்விழுங்கி
நோயாகும்!

ஓர் நொடியில் ப்ரளயத்தையே
வரவழைக்கும்....
நீதி நெறிகள் வழுவும்;
நிர்க்கதியாக்கி ஏப்பம் விடும் .....
நின்று நிலைப்பதென்னவோ
நிச்சயமில்லை!
ஆயினும்
நெடுநாள் நிசத்தை மறைத்துப்
பேயாட்டம் போடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இரட்சணிய யாத்திரிகம் :

- சென்ற இதழ் தொடர்ச்சி...

இக் காப்பியம் சிறப்புப் பாயிரத்தை ஆரம்பத்தில் கொண்டுள்ளது. இப்பகுதியில் கடவுள் வாழ்த்து, நுதலியபொருள், நூற்பயன், முதலான பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

இக்காப்பியத்தை தான் இயற்றிய நோக்கத்தினையும் நூலுக்கு இட்ட பெயரினையும் சிறப்புப் பாயிரத்தில் கிருஸ்ணபிள்ளை வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

என்னனைய பாவியர் இந்நிலவுலகில்
யாண்டுமிலர் எனினு நாயேன்
தன்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட
கிறிஸ்துயேசுசாமி செய்ய
பொன்னனைய திருவடிக்கு செந்தமிழ்
மாலிகையொன்று
புனைவானெண்ணித்
துன்னுநவ ரட்சணிய
யாத்திரிக மலரெடுத்துத்
தொடுக்கலுற்றேன் (10)

## தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

தன்னைப் பாவி
எனக் குறிப்பிடும்
அவர், தன்னைத்
தடுத்தாட் கொண்ட
இயேசுக் கிறிஸ்துவின் புகழ்
பாடுவதற்காக செந்தமிழ் மொழியில்
இரட்சணிய யாத்திரிகம் என்னும் இந்
நூலை இயற்றியதாகக் கூறுகின்றார்.

நூல் முழுவதும் கிறிஸ்தவ சமயக் கருத்துகள் இழையோடியுள்ளன. கடவுள் வாழ்த்தின் இரண்டாவது செய்யுள் வருமாறு அமைகின்றது.

ஒன்றிலே மூன்றாய்மூன்றும் ஒன்றதாய்
உலப்பிலாதாய்
நின்றுல கனைத்துந் தூய நினைவு மாத்திரையிற்
தந்து
நன்றென உவந்து இரட்சை நல்கு மெய்
ஞானானந்தக்
குன்றினை அகத்துத் தாங்கிச் சிந்தை கூடி
வாழ்வாம்.

கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றான 'மூவொரு இறைவன்' என்பதனை இச் செய்யுளின் முதல் வரி உணர்த்துகின்றது.

கடவுளால் அருளப்பட்ட பத்துக்கட்டளைகள் குறித்து அவர் நயம்பட வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

நம்மையே வணங்கல் வேண்டும் நமக்கிணையாக
வேறோர்
பொம்மையைப் புனைந்து தாழ்ந்து
போற்றிடாதிருங்கள் வீணே
நம்மது நாமம் செப்பின் நாசமே வரும் தப்பாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

செம்மைசேர் ஓய்வுநாளைச் சிந்தையால் தூய்மை செய்மின்

(மெய்யுணர்ச்சிப்படலம்: 17)

நலத்தொடு தந்தைதாயை நனியுபசரித்தல் நன்றாம்
கொலைத்திறந் துரிச்சை நீசங் களவுபொய்க் கூற்றென் றாய
புலைத்தொழில் புரியலாகா புறத்தவன் பொருள் யாதொன்றை
அலைத்தபகரிக்க எண்ணும் ஆசையை அடர்த்தல் வேண்டும்

(மெய்யுணர்ச்சிப்படலம்: 18)

என மோயீசனுக்கு அருளப்பட்ட பத்துக் கற்பனைகளை இரு செய்யுள்களில் அடக்கிக் கூறியுள்ளார்.

உடலையுருக்கிக் குருதி வடித்திட்டு உயிர்தந்த
கடலை நிகர்க்குங் கருணை

(துயிலுணர்த்து படலம்: 6)

என கிறிஸ்துவின் எல்லையற்ற அன்பு குறித்து விளக்குகிறார் புலவர். கிறிஸ்துவை சிலுவைக் காட்சியில் கண்ட நிலையில் அவர் அமைத்துப் பாடியுள்ள செய்யுள்கள் உள்ளத்தை ஆழமாக ஊடுருவுவனவாய் அமைந்துள்ளன. அச் செய்யுள்களை ஜீவபுஷ்கரிணிப் படலத்தின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ள விசுவாசக் காட்சி என்னும் பிரிவில் காணலாம். பத்துச் செய்யுள்கள் இதிலுள்ளன. இவற்றிற்கான இசை வடிவத்தினையும் (பண், காந்தாரம்) அவர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சில செய்யுள்கள் வருமாறு:

மூவாத முதல்வனை முதுசுருதி மொழிப் பொருளை
ஓவாத பெருங்குணத்த வுத்தமனை உலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்தத் துஜங்கட்டும்
தேவாதி தேவனை யான் சிலுவைமிசைக் கண்டேனே (5)

காயொளியிற் கதிர்பரப்பும் களங்கறு நீதியின் சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னைப் பணிக்கருஞ் சிந்தாமணியைத்
தூயொளி கொள் நித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கை
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே (10)

காப்பியத்தின் இரண்டாம் பருவமாக அமையும் குமார பருவத்தில் உள்ள இரட்சணிய சரிதப் படலத்திலும் கிறிஸ்துவின் வாழ்க்கை நிகழ்வுகள் முக்கியமாக அவரது பாடுகளும் மரணம், உயிர்ப்பு ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலுவைப்பாடு பற்றிய நிகழ்வுகள் அவலச்சுவை பொருந்தியனவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சிலுவையைச் சுமந்து வரும் கிறிஸ்துவின் நிலை பற்றிக் கூறப்படும் செய்யுள்களுள் ஒன்று வருமாறு:

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்து அலசிமெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்து நடை தள்ளாடி
அய்யன் மறுகூடு வரக் கண்டார் அணிநகரார்

(இரட்சணிசரிதப்படலம்: 314)

கிறிஸ்து உயிர் விட்டமை பற்றிப் பாடப்பட்ட செய்யுள்களிற் பலவற்றில் ஆழமான கருத்துகளைக் காணலாம். அத்துடன் கவித்துவம் மிக்கனவாயும் அவை காணப்படுவதனையும் அறியலாம்.

உதாரணம் :

கிழிந்தது ஆலயத்திரை இரண்டு கீற்றவாய்
கிழிந்தது ஆசாரியார் கேடுசூழுளங்
கிழிந்தது முதுமறைக் கிரியைச் சாஸனங்
கிழிந்தது தூடணங்கிளந்த வாயெலாம்

(இரட்சணிய சரிதப் படலம் : 387)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இலக்கிய மஞ்சரி...**

ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் மே 1933இல் நூல் எரிப்புக் கொண்டாட்டம் இடம் பெற்றது. மலைபோல் நூல்கள் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

1981 மே 31ல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. இலக்கிய எழுச்சியையோ, விடுதலை எழுச்சியையோ எவராலும் கட்டுப் படுத்த இயலவில்லை.

அழிக்க அழிக்க, தடைசெய்யச் செய்ய இலக்கியங்களுக்கான கேள்விகள் அதிகரிக்கத் தொடங்கின. சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை தீர்ப்பெழுதப்பட்டதும் அவரின் நாவல்கள் விறுவிறுப்பாக விலை போயின. இவ் வரிசையில் இப்போது சினிமா இலக்கியம் 'விஷ்வரூபம்' செலவில்லாமல் விளம்பரம் தேடிக்கொண்டுவிட்டது.

திறந்தது தூயவர் சேம வைப்பிடம்
திறந்தது கதிக்குறு ஜீவ வாயிலும்
திறந்தது கருணையின் திருவிழிக்கடை
திறந்தது செறுத்துள ஜீவ ஊற்றரோ

(இரட்சணிய சரிதப்படலம்: 390)

கிறிஸ்துவின் உயிர்ப்பு நிகழ்ச்சியைக் குறித்த செய்யுள்களில் ஒன்று வருமாறு:

வார்த்தையாய் நடுவராகி மன்னுயிர்க்
கிரட்சைநல்க
மூர்த்தியாய்ச் சமாதி கூடி முறைவழாது
உயிர்த்தெழுந்த
தீர்த்தனைத் தரிசித்தேத்தி ஜெயஜெய வென்று
போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி பெய்தனர் கெழுமி
விண்ணோர்

(இரட்சணிய சரிதப்படலம்: 434)

தனது பழைய வாழ்க்கை முறையை வெறுக்கும் கிருஷ்ணபிள்ளை கிறிஸ்துவைப் பற்றியறிந்த பின்னர் அவரது வழியில் பயணிக்க முற்படுகின்றார். இந்நிலைமையினைப் பற்றிய சித்திரிப்புக்கள் தன்னிரக்கம் நிறைந்தனவாக இருப்பதைக் காணலாம். 'தன் வாழ்க்கையினையே இரட்சணிய யாத்திரிகத்தில் ஊற்றியிருப்பதாகக்' கூறும் அவரை அவற்றில் தரிசிக்கலாம்.


உதாரணம்:

என்புதோல் போர்த்த யாக்கையைச்
சதமென்றெண்ணி ஆத்துமத்தை எட்டுணையும்
முன்பின் எண்ணாது புரிந்த தீவினை என் முன்பு
நின்றுடற்றலான் முதிர்பேர்
இன்பநாட்டரசே புண்ணியப் பொருப்பே இருநிலம்
புதைத்தெழுந்தோங்கும்
அன்பினார் கலியே நின்சரணடைந்தேன்
அஞ்சலென்று அடைக்கலம் அருளே

**(விசிராந்திப் படலம்: கையடைப்பதிகம்: 9)**

- தொடரும் .....

காய்ந்துமனம் எரிந்துபிறர் வாழ்வைக்
காயமது செய்திடுவர் தீயோர்
மாய்ந்துதவம் செய்தொறுத்தல் உபவாசம் என்னபயன்
மனமடங்கு மற்றவரை நேசி!




– மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

– திருமதி. லீலாவதி சந்திரசிறி –

# பெண்ணின் பெருமையா...!



சங்ககாலத் தொடக்கத்திலிருந்தே பெண்ணின் பெருமையைப் பற்றிக் கூறிவந்திருக்கின்றனர். ஒவ்வொரு ஆணின் வளர்ச்சிக்குப் பின்னாலும் ஒரு பெண் நிற்கின்றாள். யோவான் நற்செய்தியில் 2:3 கானாவூர்த் திருமண விழாவிலே திராட்சை இரசம் தீர்ந்துபோகவே, இயேவின் தாய் மரியா அவரை நோக்கி "திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" என்றார். மரியா இயேசுவை அறிந்த பெண்ணாக நிற்கிறார்.

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் 8ந் திகதி "சர்வதேச மகளிர் தினம்" கொண்டாடப்படுகிறது. அன்பு என்ற மூன்றெழுத்திற்கு அர்த்தம் சொல்பவள் பெண். எமது நாளாந்த வாழ்விலே எத்தனை பெண்கள் பெருமையுடன் வாழ்கிறார்கள் என்று கூற முடியுமா...? எத்தனை கணவன்மார் தம் மனைவியரை தம் உடலாகவும் உள்ளமாகவும் நேசிக்கிறார்கள்? இன்றைய காலகட்டத்திலே பெண்ணுக்கு தாஜ்மஹால் தேவை இல்லை. அவளை உள்ளத்தில் நேசித்தாலே போதும். வேலையற்றிருக்கும் ஒரு கணவன் தன் நண்பனிடமே மனைவியை விலைபேசி சொகுசு வாழ்க்கை வாழுகிறான். இறுதியில் நண்பனின் மனைவியாக, வாழ்க்கையில் "தவறியவள்" என்ற பெயருடன் வாழும் நிலை அவளுக்கு ஏற்படுகின்றது.

இந்தியாவிலே கடந்த வருடம் மார்கழி மாதம் 15ந் திகதி ஓடும் பஸ்ஸிலே ஒரு மருத்துவக் கல்லூரி மாணவியை ஆறு ஆண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தினார்களாம். ஓர் ஆணைப் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தினார்களா...?

ஏனைய்யா பெருமைப்பட வேண்டிய பெண்ணுக்கு இந்நிலை. அசாம் மாநிலத்தில் நள்ளிரவில் அரசியல்வாதி ஒருவர் ஒரு வீட்டிற்குள் புகுந்து பெண்ணொருவரை வல்லுறவுக்கு உட்படுத்தினாராம். அவ் அரசியல்வாதியைப் பெண்களே கூடி நின்று அடித்தார்களாம். பெண்ணே! நீ மலைச் சிகரம் போன்றவள், துணிந்து நில்!

பெண்ணை பெற்றோர் ஆசையாக வளர்க்கின்றார்கள். பல இலட்சங்கள் கொடுத்துத் திருமணம் செய்துவைக்கின்றார்கள். ஆனால், வயோதிபத்தில் அந்தப் பெற்றோரை வைத்துப் பார்ப்பதற்குப் பெண்ணுக்கு அந்த ஆண் அனுமதி தருகின்றானா...? "உடனடியாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உன் அம்மா, அப்பாவை வீட்டை விட்டு வெளியேறச் சொல், இல்லையேல், நான் வீட்டை விட்டுப் போய்விடுவேன்" என்று சொல்லும் ஆண்களும் உண்டு. இந்த இடத்திலே சிந்தியுங்கள்...

பல இலட்சங்கள் கொடுத்து விலைபோவது ஆணா...? பெண்ணா....?

"இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே..." என்று பாடினான் ஒரு கவிஞன். வெளியே பெண்ணை புகழ்ந்து பேசும் ஆண், வீட்டிலே தன் மனைவிக்கு மதிப்புக் கொடுக்கின்றானா...? விவிலியத்திலே கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலே 3:1ல் "திருமணமான ஆண்களே உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள்" என்று கூறப்பட்டுள்ளது. ஆண்களே, பெண்களைத் தயவுசெய்து மதிப்போடு நடத்துங்கள்..... ■






எந்த நாடு அது....?

சந்தேகமேயில்லை அது நமது நாடுதான்

உயர் நீதிமன்றத் தீர்ப்பை புறந்தள்ளி

பட்டனை அழுத்தினால்

கை உயர்த்தும்

றோபோக்களின் தீர்ப்பைத் தூக்கிப்பிடித்து

பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்து

உடனடியாகவே புதிய பிரதம நீதியரசரை நியமிக்கும் நாடு...

வேறு எதுவாக இருக்கும்...?

ஆளுங்கட்சி எதைச் சொன்னாலும்

அதற்கு கை உயர்த்துபவர்கள்

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள்

அதே கை உயர்த்தலை

நீதி மன்றத்துக்கும் பயன்படுத்தலாமா...?

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையில்

கையெழுத்திட்டவர்களும்

இதே பாராளுமன்ற உறுப்பினர்கள்தான்

எந்தவகையில் இது பொருத்தமாகும்

நமது நாட்டு மக்கள் தலைகுனிகின்றனர்

உலக நாடுகள் கைகொட்டிச் சிரிக்கின்றன

இப்படியான கோமாளித்தனத்தைச் செய்துவிட்டு

நெஞ்சு நிமிர்த்தி ராஜ நடைபோட

யாருக்காவது துணிச்சல் வருமா...?

- அருள்மணி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்க்கைக்கு ....

## இதயத்துள்

**உ**னது இருதயம் இறைவன் தங்குவதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (Your heart is designed to contain God) அவர் உனக்குள் வாழ விரும்புகிறார். ஆனால் எப்போது உனது இருதயம் வேறு காரியங்களினால் நிறைக்கப்படுகின்றதோ அவர் தங்க இடமின்றிப் போய்விடுகின்றது. இதன் நிமித்தம் நீ இறைவனுடன் இணைப்பில் இல்லாது போய்விடுகின்றாய். ஆகவேதான் அவரின் வல்லமை உனக்குள் தங்காமல் போய்விட நீ சோர்ந்து போகின்றாய். இதனால் தான் உனக்குள் ஒவ்வொரு நாழியும் கவலைகள் தொடர்கின்றன.



சுருங்கச் சொன்னால், உனது இருதயத்தை உலக காரியங்களினால் நிறைக்கும் போது, இறைவனுக்கு இடமின்றிப் போவதனால் அவரின் ஆசீர்வாதம் உனக்குள் தங்காமலேயே போய்விடுகின்றது.

நம்முடைய வீடுகளில் கராஜ் (Garage) எதற்காகச் செய்யப்பட்டுள்ளது? வாகனங்களை நிறுத்திக்கொள்ள அல்லவா..? இதற்காக மாத்திரமே அவை வடிவமைக்கப்பட்டுள்ளன அல்லவா...? அதன் நோக்கமும் அது அல்லவா...? ஆனாலும் அந்த கராஜை அனேக தடவைகளில் ஏனைய பொருட்களால் நாம் நிறைத்து வைப்பதில்லையா...? இப்படி இருக்கும் இடத்தில் எப்படி வாகனத்தை நிறுத்த இடம் இருக்கும்?

இதுபோலவே உனது இருதயமும் இறைவன் தங்குவதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்குள் கவலை, வெறுப்பு மற்றும் குற்ற உணர்வுகளை நிறைக்கும்போது இறைவன் தங்குவதற்கு இடமற்றுப் போகின்றது.

உனது இருதயம் நல்ல காரியங்களாகிய, விளையாட்டு, வேலை, பொழுதுபோக்கு போன்றவற்றால் கூட நிறைந்து இருக்கலாம். ஆனால் அவை உனது இருதயத்தில் முதலிடத்தில் இருந்துவிடக் கூடாது. காரணம் உனது இருதயம் வடிவமைக்கப்பட்டதன் நோக்கம் அது அல்ல. உண்மையில் நீ இறைவனுக்குத் தொண்டுகள் செய்தும் பணிகள் செய்துகொண்டும்கூட

Fr. ரமேஷ்



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# "ஓசான்னா"

இயேசுக்கிறிஸ்து இறுதியாக ஜெருசலேமுக்கு வந்தபோது அவரை கழுதைக் குட்டியின் மேல் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்ற மக்கள் "ஓசான்னா, தாவீதின் மகனுக்கு ஓசான்னா" என்று முழக்கமிட்டதை வேதநூல் கூறும். இது, உரோமைப் பேரரசில் படையினர் வெற்றிக்களிப்போடு நகருக்குள் வரும்போது மக்கள் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்ததைப் போன்றது. திருவழிபாட்டிலும் 'ஓசான்னா' என்னும் வார்த்தை செபிக்கப்படுகிறது.

இது திருப்பாடலிலிருந்து உள்வாங்கப்பட்ட ஓர் எபிரேயச் சொல்லாகும். அதாவது, "ஆண்டவரே, உம்மை நோக்கிக் கூக்குரலிட்டோம் எம்மைக் காப்பாற்றும்" என்பது இதன் பொருள்.

யூதர்களின் கூடாரத் திருவிழாவின்போது, குருக்கள் திருப்பீடத்தைச் சுற்றி வரிசையாக வருகையில் மக்கள் மகிழ்ச்சியால் தலைகளை ஆட்டி "ஓசான்னா" என்று ஆர்ப்பரித்தனர். இத்திருவிழாவின் இறுதிநாள் பெரிய ஓசான்னா என்றே அழைக்கப்பட்டது.

திருப்பலியில் இவ்வார்ப்பரிப்பு இணைக்கப்பட்டதன் வரலாற்றுப் பழைமையை 'டிடாக்கே' என்ற நூலில் பார்க்கலாம். ■

இருக்கலாம். ஆனால் இந்த நிலையில்கூட இறைவனை நீ தவறவிடலாம்.

எனவே, இறைவனுக்கு உன் இருதயத்தைக் கொடு. அதுவும் இன்றே கொடு. அதன்பிறகு உன் நாட்கள் எப்படி இருக்கப் போகிறது என்பதனை மாத்திரம் பார்.....

இனி, பணம் வேண்டுமா அடுத்தவனைக் கேட்குமுன் உன் இருதயத்துள் இருக்கும் ஆண்டவனைக் கேள். உடல் ஆரோக்கியம் வேண்டுமா....? வைத்தியரை நாடுமுன் வாழ்வைத் தந்த இறைவனைக் கேள். ஏமாந்து போனதற்காக ஏமாற்றியவனை சபிக்காதே. ஏமாற்றத்தின் வழியில் நல்லதொரு அனுபவம் தந்த இறைவனுக்கு நன்றி சொல்.

யோசேப்பு என்ற வாலிபன் சிறைக்குள்ளே இருந்தபோது, எத்தனை வேதனைகள் அவனுக்குள்! நன்மையின் நிமித்தம் வாழ்ந்தவனுக்குக் கிடைத்தது சிறைத் தண்டனை. ஆனால் அதற்காக அவன் தனது இருதயத்தைத் தளரவிடவில்லை. காரணம் அவன் இருதயத்துள் வாழ்ந்து கொண்டிருந்த இறைவனை அவன் இறுகப் பற்றியிருந்தான். அதனால் அவனுக்குக் கிடைத்த ஆசீர்வாதம் எவ்வளவு பெரியது தெரியுமா...? வருடங்கள் கடந்தன. வேதம் சொல்லுகிறது, அவன் எகிப்து தேசத்திற்கே அதிபதியாக உயர்த்தப் பட்டான் என்று.

நண்பனே!

இறைவனை உன் இருதயத்துள் இருத்திக்கொள். அதற்காக இன்று வேண்டுமானால் நீ துன்பத்துள் இருக்கலாம். ஆனால் ஒருநாள் அதுவே உன்னைக் கடந்து போகும்போது கிடைக்கும் ஆசீர்வாதம் பெரிதாக இருக்கும் என்பதனை மறந்து விடாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# புனிதர்களை அறிவோம்

- மற்றில்டா இராஜேந்திரம் -

## பங்குனி மாதம் – 2013

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 புனித அல்பினஸ் | 2 புனித வில்லி புனித சார்ள்ஸ் |
| 3 புனித குணகுந்தர் | 4 புனித கசிமிர் | 5 புனித ஹட்ரியன் புனித சிலுவை ஜோன்யோசப் | 6 புனித கொலற் | 7 புனித பெப்பேதுவாவும் புனித பெலிசிற்றும் | 8 புனித இறைவனின் ஜோன் | 9 புனித ரோம் பிரான்சிஸ் புனித டோமினிக் சாவியோ |
| 10 புனித விக்டர் புனித மக்கரியுஸ் | 11 புனித யுலோஜியஸ் | 12 புனித இனசென்ட் | 13 புனித யூப்ரேசியா புனித றொட்றிக் | 14 புனித மற்றில்டா | 15 புனித லூயிஸ் டி மரிலக் | 16 புனித ஹேபர்ட் |
| 17 புனித பற்றிக் | 18 புனித ஜெருசலேம் சிறில் | 19 புனித யோசேப் (புனித மரியாவின் கணவர்) | 20 புனித குளோடியா புனித வுல்பிரான் | 21 புனித புளுநிக்கலஸ் | 22 புனித லீ | 23 புனித மொங்ரோ விஜோ டியூரி பியல் |
| 24 புனித கத்தரின் | 25 கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு | 26 புனித கஸ்ஸியன் புனித மாகிரட் கிளித்ரோ | 27 புனித ரூபர்ட் புனித அகஸ்ரா | 28 புனித கப்பிரிஸ் தான்யோன் புனித கொன்ரான் | 29 புனித அரிமத்தியா யோசப் புனித அகஸ்ரா | 30 புனித ரூபர்ட் புனித அகஸ்ரா |
| 31 புனித பல்பீனா புனித ஆமோஸ் புனித பெஞ்ஞமின் | | | | | | |

"எப்படி மெழுகுவர்த்தி பற்ற வைத்தவுடனேயே பிரகாசிக்க ஆரம்பிக்கிறதோ, அப்படியே நல்ல காரியங்களும் இந்த இருண்ட உலகில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்"

- ஷேக்ஸ்பியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனிதர் வரலாறு



**பங்குனி - 06 புனித கொலற்**

பிரான்ஸ் நாட்டிலுள்ள கோர்ப்பீ எனுமிடத்தில் வயது சென்ற அமைதியான பெற்றோருக்கு மகளாகப் பிறந்தார். இருபத்திரண்டு வயதானபோது பெற்றோர் இறக்க, புனித பிரான்சிசின் மூன்றாம் சபையில் தன்னை இணைத்துக்கொண்டார். 1406ம் வருடம் இவ் வாழ்வின் 4 வருடங்களின் பின் புனித கிளேயாரால் அறிமுகப் படுத்தப்பட்ட கடுமைப் போக்குடைய நியமங்களைக் கொண்ட சபை மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு அனுசரிக்கப்பட்டது. எனவே, இதன்பால் கொலற் ஈர்க்கப்பட்டார். பரிசுத்த பாப்பரசர் 13வது பெனடிக்ற் அவர்களால் புனரமைக்கப்பட்ட இந்த மூன்றாம் சபை புனித கொலற்றிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் பிரான்ஸ் நாடு முழுவதும் பயணஞ்செய்து கன்னியரில்லங்களைப் புனரமைத்தும், புது இல்லங்களையமைத்தும் வந்தார். இவ்வேளையில் 1429ம் வருடத்தில் மௌலின்ஸ் எனுமிடத்தில் புனித ஜோன் ஒப் ஆர்க்கைச் சந்தித்தார் எனவும் கூறப்படுகிறது. 40 வருடங்களாக நீடித்த இவர் சேவைக் காலத்திலே பல ஆன்மீக, சரீர இடையூறுகளைக் கடந்து வெற்றிகரமாகப் பதினைந்து ஏழைகட்கான இல்லங்களை மீளமைத்தார். இச்சபையின் ஒரு கிளையானது இற்றைவரை கொலற்றினர் என்று அழைக்கப்பட்டு வருகிறது. கென்ட் எனுமிடத்தில் இவர் ஆரம்பித்த கொலற் இல்லத்திலேயே 1447ம் வருடம் இறைபதம் சேர்ந்தார்.

**பங்குனி - 14 புனித மற்றில்டா**



சக்சனிய பிரபுவின் மகளாகப் பிறந்த இவர் அரசகுலத்தவராவார். சிறு வயதிலேயே இவரது பாட்டியுடன் கன்னியரில்லத்தில் வாழ்ந்தார். கன்னியர் இல்லத் தலைவியாக இருந்த அவருடன் தங்கித் தையல் வேலையுடன் ஏழைகளின் அன்பைப் பெறுவதிலும், செபிப்பதிலும், ஆன்மீக விடயங்களை வாசிப்பதிலும் தன் பொழுதைப் போக்கினார். 913ம் வருடத்தில் இவரது பெற்றோர் விவாகம் செய்து கொடுக்கும் வரை இங்கேயே வாழ்ந்தார். இவரது கணவர் ஹென்றி, பறவை வேட்டையில் மிக விருப்புடையவர். ஹென்றி 916ம் வருடத்தில் அவரது தந்தையின் மறைவுக்குப்பின் பிரபுவாகத் தெரிவானார். 919ம் வருடம் ஜெர்மனிய அரசரானார். பக்திமிக்க அரசி மற்றில்டா தன் நற்பண்புகளால் இராட்சியத்தை அலங்கரித்தாரென்றால், அது மிகையில்லை. நோயாளரையும், காயமடைந்தோரையும், புறக்கணிக்கப்பட்டோரையும் தரிசித்துக் கவனித்தார். படிப்பறிவில்லாதோர்க்குக் கற்பித்தார். சிறைக்கைதிகளுக்கு உதவினார். பாவிகளை மனந்திருப்புவதற்கு முயற்சி செய்தார். இவரது கணவரும் இவருக்கு ஒத்துழைத்தார். மணவாழ்க்கையின் 23 வருடங்களின் பின் 936ம் வருடம் ஹென்றி அரசர் இறந்ததும், அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலியை ஒப்புக்கொடுத்து அக்கணத்திலிருந்து உலக ஆடம்பரங்களை ஒதுக்கினார். இதனையடுத்து அவரது மூன்று மகன்களில் ஒருவரான ஓதோ என்னும் மகன் சக்கரவர்த்தியானார். ஹென்றி என்ற மகன் பவேரியாவின் அதிபதியானார். புரூனோ என்ற மகன் அதிமேற்றிராணியாராகிப் பின் புனிதருமானார். ஓதோ 937ம் வருடம் ஜெர்மனிக்கு அரசராகி 962ம் வருடம் சக்கரவர்த்தியுமானார். ஆனால், இவ்விரு மகன்களது இராட்சியத்திற்கான போட்டியில் மூத்த மகனை ஆதரித்ததால் இத்தவறினை ஈடுசெய்ய தன்னை வருத்திக் கொண்டதாலும், இரு மகன்களது துன்புறுத்தலாலும் 968ம் வருடம் இறைவனடி சேர்ந்தார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.03.2013

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் – 119

## இணைச்சட்டம் அதிகாரங்கள் 24–25

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே மக்களிடம், "ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாகத் திருமணம் செய்திருந்தால் அவன் போருக்குப் போகக்கூடாது. மாவரைக்கும் கல்லின் கீழ்க்கல்லையாவது, மேற் கல்லையாவது அடகாக வாங்காதே! அது அவன் உயிரை ............................ வாங்குவது போலாகும். இஸ்ரயேலன் ஒருவன் தன் இனத்தவன் ஒருவனைக் கடத்தி அடிமையாக நடத்தினால் அல்லது விற்பதாகக் கண்டுபிடித்தால் அவன் சாகட்டும். இவ்வாறு தீமையை அகற்று. தொழுநோயைக் குறித்து எச்சரிக்கையாயிரு. எகிப்திலிருந்து நீ புறப்பட்டு வரும் வழியில் ஆண்டவர் ............................ செய்ததை நினைவில் இருத்து. உனக்கு அடுத்திருப்பவருக்கு ஏதாகினும் கடன் கொடுத்தால், அதற்கு அடகாக எதையும் வாங்க அவரது வீட்டினுள் நுழையாதே. வெளியே நில். உன்னிடம் கடன் வாங்கியவர், வெளியே அடகைக் கொண்டு வரட்டும். அவர் வறியவராயின், நீ அந்த அடகை வைத்துக்கொண்டு தூங்காதே. மாறாக, ............................ மறைவதற்குள் அதை அவரிடம் திருப்பிக்கொடு. அதனால், அவர் உனக்கு ஆசி வழங்குவார். ஆண்டவர் முன் நீ ஏற்புடையவனாவாய். வறியவரும் எளியவருமான கூலியாட்களைக் கொடுமைப்படுத்தாதே! அந்தந்த நாளில் அவரது கூலியைக் கதிரவன் மறையுமுன் கொடுத்துவிடு. இல்லையெனில் அவர் வறியவரென்பதால் உனக்கெதிராக ஆண்டவரிடம் முறையிடுவார். அது உனக்கு ............................ கைம்பெண்ணின் ஆடையை அடகாக வாங்காதே. எகிப்து நாட்டில் நீ அடிமையாக இருந்ததையும், உன் ஆண்டவர் உன்னை விடுவித்ததையும் நீ நினைவிலிருத்தி இவற்றை செய்யக் கட்டளையிடுகிறேன். அறுவடை செய்யும்போது அரிக்கட்டை மறந்து வயலில் விட்டு வந்தால், திரும்பி அதை எடுக்கப் போகாதே. ............................, அனாதைக்கும், கைம்பெண்ணுக்கும் விட்டுவிடு. வழக்கின்போது குற்றத்திற்கேற்ப அடிக்கலாம். ஆனால், நாற்பதுக்குமேல் அடிக்கலாகாது. போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே. பெரியதும் சிறியதுமான ஏமாற்று முகத்தல் அளவைகளை உன் வீட்டில் வைத்திருக்காதே. நிறைவான நேர்மையான எடைக்கற்கள் உன்னிடம் இருக்கட்டும். அதேபோல முகத்தல் அளவைகளும் இருக்கட்டும். அதனால், உன் கடவுள் உனக்குக் கொடுக்கவிருக்கும் ............................ உன் நாட்கள் நீடிக்கும். மாறாக, மேற்குறிப்பிட்டவற்றில் நேர்மையற்று நடப்போர் அனைவரும் கடவுளுக்கு அருவருப்பானவர். நீ எகிப்திலிருந்து புறப்பட்டு வருகையில் ............................ உனக்குச் செய்ததை நினைவிலிருத்து. நீ களைத்துச் சோர்ந்திருக்கையில் வழியிலே அவன் உன்னை எதிர்த்து, உன் பின்னால் வலுவற்றவர்களை வெட்டிவீழ்த்தினான். ஏனெனில், அவன் கடவுளுக்கு அஞ்சவில்லை. ஆகவே, உன் ஆண்டவர் உனது ............................ உடைமையாக்கிக் கொள்ளுமாறு உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டைச் சுற்றியுள்ள பகைவர் அனைவரையும் உனக்குக் கீழ்ப்படுத்தி, உனக்கு ஓய்வுதரும்போது, அமலேக்கின் நினைவு ............................ கீழ் இல்லாதவாறு அழிக்கவேண்டும். இதை மறந்துவிடாதே" என்று கூறினார்.

| | |
|---|---|
| **விடைகள்:** | **பையில், நாட்டில், அமலேக்கு, உரிமைச்சொத்தாக, வானத்தின், அன்னியருக்கும், பாவம், கதிரவன், மிரியாமுக்கு, அடகாக.** |

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 119

பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. ஒரு நிமிடத்தில் பூமி தன் சுழல் பாதையில் கடக்கும் தூரம்
   (950 மைல் - 1200 மைல் - 850 மைல்)

2. ஈ.்.பிள் டவர் இருக்கும் நாடு
   (ஜேர்மனி - பிரான்ஸ் - அமெரிக்கா)

3. "இரட்சணிய யாத்திரிகம்" என்னும் நூலின் ஆசிரியர் (பெப்ரவரி தொண்டனிலிருந்து...)
   (வீரமாமுனிவர் - வேதநாயகம்பிள்ளை - N.A. கிருஷ்ணபிள்ளை )

4. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இருந்த இராச்சியங்கள்
   (மூன்று - ஐந்து - ஏழு)

5. 'வீட்டுக்கு வெள்ளை அடித்தான்' என்பது
   (பொருளாகு பெயர் - பண்பாகு பெயர் - உவமை ஆகு பெயர்)

6. 'கண்கெட்டபின் ..........................................'
   (கைத்தடி வேணும் - கண்ணாடி எதற்கு? - சூரிய நமஸ்காரம்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 119
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## விவிலியம் கற்போம் - 117 விடைகள்

போரிட, படைத்தலைவர்கள், இறந்தார், படைத்தளபதிகளை, நாடுகளை, லேவியர், பெண்ணை, நகர் வாயிலில், இரவில்

## அறிவை வளர்ப்போம் - 117 விடைகள்

1. 1.6 கிலோ மீற்றர்
2. பிறெட்ரிக் பன்ரிங்
3. சிலாபம்
4. வேதவியாசர்
5. பண்டிதனாவான்
6. வியங்கோள் வினைமுற்று

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுவோர்**

- அன்ரூ ஷியாம் லோகநாதன்
  'சோபனம்', றோ.க.ஆலய வீதி,
  திருக்கோவில் - 2.
- A. லிஷாந்தன் ஒலிவர்
  # 169/1 A, ஹூர்த்து ஒழுங்கை,
  பார்வீதி, மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- T. லக்ஷன்,
  பாடசாலை வீதி, மாங்காடு,
  செட்டிபாளையம்.
- மனோஷிகா சக்திவேல்,
  அந்தோனியார் தேவாலய வீதி,
  தாழங்குடா - 3,
  ஆரையம்பதி.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 69 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  லெயோன் பெபன் பாத்லட்,
  பிரதான வீதி,
  வாழைச்சேனை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  ஐ. மரினோ யூக்கலிஸ்டன்,
  இல. 11/3, 7ம் குறுக்கு,
  கல்லடி, டச்பார்,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  J. ஜூட் ஜெருஷாந்,
  12, 3ம் குறுக்கு,
  திருச்செந்தூர், கல்லடி,
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காற்றில் கலந்து வரும்....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

மார்ச் – 2013 **கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்**

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.55 மணி**

நாள் : 09, 10, 11, 12, 13, 14, 15, 23, 24, 25, 26, 27, 28, 29

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - மாலை 7.00 மணி**

நாள் : 03, 17, 31

(வார்த்தை வழிபாடு, வேரைத்தேடி, செய்திகள், விடுதலை வீரர் மோயீசன் (ஒலிச்சித்திரம் தொடர்), சிந்தனை உரை, பாடல்கள் இன்னும்.....)

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) - மாலை 7.00 மணி**

நாள் : 05, 19

(உரையாடல், கதையும் கருத்தும், குறுநாடகம், புத்தாக்கம் பாடல்கள் இன்னும்.....)



தவக்கால வெள்ளி சிறப்பு நிகழ்ச்சிகள் (மாலை 7.00 மணி)
மற்றும் குருத்து ஞாயிறு, புனித வியாழன், பெரிய வெள்ளி,
பெரிய சனி, உயிர்ப்பு ஞாயிறு
ஆகிய நாட்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.

நிகழ்ச்சித் தொகுப்பு :

மலர்வேந்தன்

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org